# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு


செப்டம்பர் 2019

திபி 2050 . மலர் 1 . இதழ் 6




# பதிப்புரை

## இவ்விதழில்


1. தனியார்மயமாக்கல்
2. சாதியம்
3. கல்வித் தாள் கேள்வி
4. தமிழ் பெயர் பலகை
5. மக்கள் களம்


"எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."

- தலைவர் பிரபாகரன்

பனை மரம் நம் முன்னோர்கள் கற்பக மரம் என்றனர்.

தன் ஒவ்வொரு பகுதியையும் கொடுத்து உதவுவது பனை.

எதையும் எதிர்பார்க்காதோர்க்கு மரியாதை குறையும் என்பது கடந்த சில பத்தாண்டுகளில் பனைகள் கட்டற்று அழிக்கப்பட்டுவிட்டன.

இப்போது நாம் தமிழர் பனையை மீட்கும் உன்னத வேலையைத் தொடங்கியுள்ளது.

பனைக்கும் நாம் தமிழர்க்கும் நிறைய ஒற்றுமை உண்டு

இரண்டும் எதையும் எதிர்பார்ப்பதில்லை. கொடுத்துக் கொண்டே இருக்கும்.

வரண்ட காலத்திலும் நம்பிக்கையைத் தரும் கடைசி நம்பிக்கை இரண்டும்.

வெல்லப்போறான் விவசாயி !

ஆசிரியர் குழு

**தனியார்மயமாக்கல் தவறா?**

ஒரு முதலாளித்துவ நாட்டில், ஓர் அரசு, உண்மையில், எந்த தொழிலும் ஈடுபடக்கூடாது. மாறாக அரசாட்சியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். அரசு தொழிலில் ஈடுபடும்போது, அதன் ஆட்சி கவனம் மற்றும் தொழிலைக் கட்டுப்படுத்தும் சட்டங்களில் குழப்பம் ஏற்படும். எனவே, அரசு தொழிலிருந்து விலகியிருப்பதே சரி, கொள்கை அளவில்.

**இந்தியாவில் பொதுத் துறைகள்**

விடுதலை அடைந்த பிறகு தொழில்களை வேகமாக வளர்க்கும் நோக்கத்துடன் சோவியத்தை ஒட்டி இந்திய அரசு பல பொதுத்துறை நிறுவனங்களைத் தொடங்கியது.

**இந்தியப் பொதுத் துறைகளில் என்ன பிரச்சனை?**

பொதுவாகவே அரசுத் துறைகள் திறன் குறைந்தவை. பொதுத் துறை நிறுவனங்களும் அவ்வாறே. பலவை அங்கு வேலைபார்ப்பவருக்கு மட்டுமே இயங்குகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கேரளாவில் ரயில்வே அதிகாரிகள்



தங்குவதற்காக பல கோடியில் விருந்தினர் மாளிகைக் கட்டினர். ஆனால், கொச்சி ரயில் நிலையத்தையை சீரமைக்க செலவழிக்கவில்லை.

இதில் முக்கிய விடயம், இவர்கள் செலவழித்தது, ரயில்வே பணம் அல்ல, ரயில்வே வழியாக மக்களின் பணம்.

டால்கோ என்ற ஸ்பானிய நிறுவனம் இந்தியாவில் சொந்த செலவில் ரயிலை ஓட்டிக் காண்பித்தது. அந்த ரயில்களின் சிறப்பு, பெண்டுலம் தொழில் நுட்பம்.

இந்திய தண்டவாளங்களை மாற்றியமைக்காமலே எளிமையாக 200 கிமீ அதிவேகத்தில் செல்ல முடியும். மும்பை - டெல்லி செல்ல 18 மணி நேரம் இந்திய 'அதிவேக' ரயில்களில் ஆகும். டால்கோ ரயில் வெறும் 12 மணி நேரத்தில் அதை செய்தது. ரயில்வே அதிகாரிகள் மக்கள் பொருட்கள் வைக்க அதிக இடமில்லை என்பது போன்ற உப்புப் பெறாத காரணங்களைக் கூறி நிராகரித்தனர்.

நம் பொதுத் துறை நிறுவனங்கள் எந்த மாற்றத்தையும் விரும்புவதில்லை.

**நட்டத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்கள்**

பல நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. இந்த நட்டத்தை மக்களின் பணம் கொண்டு அரசு ஈடுசெய்கிறது. அந்தப் பணத்தைப் பெற மக்களிடம் வரியைக் கூட்டுகிறது. அதாவது, மக்களின் பணம் ஒரு சில அலுவலர்களின் பைகளுக்கு அரசின் வழியாகச் செல்கிறது.

**அப்போது நட்டத்தில் இயங்கும் அனைத்தையும் தனியார் மயமாக்கிவிலாமா?**

கூடாது.

லாபம் மட்டுமே பொதுத் துறை நிறுவனங்களின் குறிக்கோளாக இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக, ரயில்வே. லாபத்தைத் தாண்டி, மக்களுக்கு சேவை வழங்குவதே முக்கியமாக இருக்க முடியும். அவை போல, நாட்டின் திட்டங்களுக்குத் தேவையான ( Strategical Importance ) நிறுவனங்களையும் தனியார் மயமாக்கக் கூடாது.

**இப்போது நடந்துவரும் தனியார்மயமாக்கல் சரியா?**

சரி மற்றும் தவறு.

சேவை அல்லாத, நாட்டின் திட்டங்களுக்குத் தேவையல்லாத நிறுவனங்களை தனியர்மயமாக்குவது சரி. நிலக்கரி சுரங்கும், இயற்கை எரிவாயு, பிற சுரங்கங்கள் ஆகியவற்றையெல்லாம் தனியாருக்குக் கொடுப்பது அநியாயம். தாதுப்பொருட்கள் மக்களின் சொத்து. இயற்கை அளித்தது. தனியார் நிறுவனங்கள் உருவாகியதல்ல. இவற்றின் பலனை முழுமையாக அரசின் வழியாக மக்கள் பெற வேண்டும்.

நார்வேவிலும் எண்ணெய் வளம் உண்டு. நைசீரியாவிலும் எண்ணெய் வளம் உண்டு. நார்வேவில் அரசு எண்ணெய் எடுக்கிறது. மக்களிடம் அதன் பலன் சென்றுள்ளது. நைசீரியாவில் பன்னாட்டு தனியார் நிறுவனங்கள். அது ஒரு சிலரை மட்டும் பணக்காரர் ஆக்கியுள்ளது. மக்கள் வறுமையில் சாகிறார்கள்.
தற்சமய இந்திய தனியார்மயமாக்கல் கொள்கை, தனியார்க்கு அரசு சொத்துக்களை வாரி கொடுத்து பெருமுதலாளிகளை உருவாக்கும் நோக்கத்துடனேயே இருக்கிறது.

துறைமுகங்கள், வானூர்தி நிலையங்களையும் மாநில அரசுகளுக்குக் கொடுக்கலாம்.

புல்லட் அதிவேக ரயில்களில் தனியார் முதலீட்டை ஊக்கவிப்பதில்லை. அதற்கு மக்கள் பணம் வேண்டும். ஆனால், ஏற்கெனவே மக்கள் பணத்தில் அமைக்கப்பட்ட ரயில்கள் மட்டும் தனியாருக்கு. இது அப்பட்டமான அநியாயம்.

எனவே, துறையைப் பொறுத்தே தனியார் மயமாக்கல் சரியா தவறா எனக் கூற முடியும். இப்போது நடந்துவரும் தனியார்மயமாக்கல் சிலவற்றில் நல்லதாகவும், பெரும்பாலானவற்றில் தவறாகவுமே உள்ளது.

**உலக அளவில் எப்படி?**

உலக அளவில் கூட இது ஒரு விவாதத்திற்குரிய பேசும் பொருள் தான்.

பிரிட்டனில், தாட்சர் காலத்தில் தனியார்மயம் ஊக்குவிக்கப்பட்டது. அதனால், பின்னாளில் பல பிரச்சனைகள் எழுந்தன. ரயில் சேவை மிக மோசமானது. பல விபத்துகளும் நடந்தன. பின் தண்டவாளப் பராமரிப்பை அரசே எடுத்துக் கொண்டது.

இப்போது, தொழிலாளர் ( லேபர் ) கட்சி தனியார்மயத்தை எதிர்க்கிறது. அடுத்து ஆட்சிக்கு வந்தால், பெரும் நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்படும் என தெரிவிக்கிறது.

பல பொருளாதார நிபுணர்கள் முதலாளித்துவத்தை பெருமுதலாளிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக, அரசு சில பெரிய நிறுவனங்களை அரசுடமையாக்க வேண்டும் என்கிறார்கள். இதன் மூலம், பெருமுதலாளிகள் குறைவர். அரசை அவர்கள் கட்டுப்படுத்துவது குறையும் என்கின்றனர்.

வேதாரண்யத்தில் சிதைக்கப்பட்ட அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலை. தேச தலைவர்களின் சிலை உடைக்கப்படுவதும், அவமரியாதை செய்யப்படுவதும் இது முதல்முறையல்ல. பல தருவாய்களில் நடந்த ஒன்றுதான். சமூக விடுதலை, வர்க்க விடுதலை, அரசியல்-பொருளாதார விடுதலை வேண்டி போராடியவர்களை இப்படி அவமரியாதை செய்வது பெருமை என கருதுவோர் இருப்பார்கள் என்றால், நிச்சயம் அவர்களை முட்டாள் என்றே சொல்வேன்.

சிலையை உடைக்கலாம். அவருடைய சித்தாந்ததை, தத்துவத்தை ஒரு நாளும் ஒன்றும் செய்துவிட முடியாது. இதை செய்தவர்களின் செயலுக்கும் சிந்தனைக்கும் கடும் கண்டனம் தெரிவிக்கிறேன். சமூகநீதி கொள்கைக்கொண்ட தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பசும்பொன் ஐயா மற்றும் தோழர் லெனின் போன்ற தலைவர்களின் சிலைகளை சிதைக்க முற்படுவோரின் அற்பச் சிந்தனைகளை துடைத்தெறிய தேவையான அனைத்து பணியையும், சாதி/மத வெறி எனும் போதை தலைக்கு ஏரிய நிலையில், தன் திமிரை வெளிக்காட்டும் தற்குறிகளை அரசாங்கம் கரம் கொண்டு அடக்கி ஒடுக்க வேண்டும். கலவரத்தை தூண்டும் விதமாக நடைபெறும் தீயசக்திகளின் இச்செயலை கண்டும் காணாமல் இருப்பதும் குற்றமே.

எதிரியை மன்னிக்கலாம்; துரோகியை மன்னிக்கலாமா?

டாக்டர் அம்பேத்கர் அவர்களை எதிர்த்தால் அவன் எதிரி. இம்மாதிரியான வீரமில்லாத கோழைத்தனமான இந்த தாக்குதல் எப்போதும் வீரமாகாது.

எனது அருமை செயல் வீரர்களே, களப்போராளிகளே அற்ப இலாபங்களுக்காக இவ்வாறான படுபாதகச் செயல்களை செய்பவர்கள் ஒருபோதும் வீரன் இல்லை என்பதை மட்டும் அறுதியிட்டு உறுதியாக கூறுகின்றேன். சமூக விடுதலை, வர்க்க விடுதலை, அரசியல்-பொருளாதார விடுதலை, பாலின விடுதலை வேண்டும் என போராடியவர்களை எப்போது பாதுகாக்க கூண்டில் சிறைவைத்தோமோ அன்றே தொடங்கியது அவர்களை அவமரியாதை செய்யும் செயல்.

#தீண்டாமை ஒரு பாவச்செயல், #தீண்டாமை ஒரு பெருங்குற்றம், #தீண்டாமை மனித நேயமற்றது.

என்று கற்றுத் தரவேண்டிய பள்ளிக்கூடங்கள் அதை செய்கிறதா?

மத்திய அரசாங்கம் நடத்தும் பள்ளியான கேந்திரிய வித்யாலயாவின் ஆறாம் வகுப்பு பாடத்தில் கேட்கப்பட்ட கேள்விகள், பகுத்தறிவு உள்ளவர்கள் யாரேனும் இப்படிபட்ட கீழ்த்தரமான கேள்விகளை வகுக்கமுடியுமா? அப்படி செய்தால் அவர் ஒரு கல்விமானா?

1. தலித் என்றால் யார்? என்று கேள்விக்கு கீழே நான்கு பதில்கள் வெளிநாட்டுகாரர், தீண்டத்தகாதவர்கள், நடுத்தர வகுப்பு, உயர்வகுப்பு,

#தீண்டத்தகாதவர்கள் (சரியான பதில்)

2. முஸ்லிம்கள் யாருன்னு கேள்வி.

இதில் இந்திய துணைக்கண்டத்திற்கு என புதிய கல்விக் கொள்கை வேறு, என்ன பெரிய மாற்றம் இருக்க போகிறது.

தமிழர் என்றால் யார்? என்று கேள்விக்குக் கீழே நான்கு பதில்கள்

*"சாதிகள் இல்லையடி பாப்பா; - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்; நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்." - பாரதி*



தீண்டத்தகாதவர், கருப்பர், ஒதுக்கப்பட்டவர், தரம் தாழ்ந்தவர் என்று ஒரு நாள் கேள்வி கேட்கப்படும் அவ்வளவு தான்.

இல்லை எப்படி எதுவும் நடக்காது என்று மறுப்பவர்கள் இருப்பார்கள் என்றால் முதலில் கேட்கப்பட்ட கேள்வி எப்படி வந்தது என்பதைச் சொல்லட்டும்

குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் எப்படிப்பட்ட வன்மம். எவ்வளவு கீழ்த்தரமான சிந்தனைகளை வளர்ப்பது. தீண்டாமை கூடாது என்பதற்காக வகுப்பறையில் படிக்கும் போது அர்த்தம் தெரியவே கூடாது என்பதற்கு தான் சீருடை தீண்டாமையையும் சாதி மத வெறியையும் ஊட்டி வளர்ப்பதுதான் மத்திய அரசாங்கத்தின் நோக்கம்.

இயற்கை வளம், மண் வளம், மரம், மலை வளம், சாதி, மதம், மொழி, கடவுள் என அனைத்தும் எல்லாத்துக்கும் எல்லாருக்கும் பொதுவானவன் மனிதன்.

*"அரிதரிது மானிடர் ஆதல் அரிது*
*மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு*
*பேடு நீங்கிப் பிறத்தல் அரிது*
*பேடு நீங்கிப் பிறந்த காலையும்*
*ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது*
*ஞானமும் கல்வியும் நயந்த காலையும்*
*தானமும் தவமும் தான்செயல் அரிது*
*தானமும் தவமும் தான்செய்வ ராயின்*
*வானவர் நாடு வழிதிறந் திடுமே." -*

*ஔவையார்*



எப்படிபட்ட தரமான அறிவுக் களஞ்சியம், தாய் தமிழ் இலக்கியம். கல்வி முறை என்பது அறிவை வளர்க்கவா அல்லது அதை சீரழிக்கவா?

தலித் என்ற வார்த்தை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை புண்படுத்தக் கூடிய சொல்லாக இருப்பதால் தலித் வார்த்தையை தவிர்த்துவிட்டு பட்டியல் இனத்தவர் என்று குறிப்பிட உத்தரவிட்டது, மும்பை உயர் நீதிமன்றம். குறிப்பாக ஊடகங்கள் `தலித்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு தடை விதித்தது மும்பை உயர் நீதிமன்றம்.

உயர் நீதிமன்றமோ, உச்சநீதிமன்றமோ, சட்டமன்றமோ, பாராளுமன்றமோ எதற்குமே செவி சாய்க்காதது இந்துத்துவா கும்பல்.

தமிழ்நாடு கடை நிறுவுதல் சட்டம் 1948 படி, முதன்மையாக தமிழ் இடம்பெற வேண்டும். மேலும், மற்ற மொழிகளைக் காட்டிலும் தமிழ் பெயர் பெரியதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக ஆங்கிலம் இடம்பெறலாம். அதன்பிறகு மற்ற எந்த மொழியிலும் வைத்துக்கொள்ளலாம்.

1982 தமிழக ஆணைப்படி, பெயர் பலகையில் தமிழ் இருப்பது கட்டாயம். இல்லையெனில் கடை உரிமம் ரத்துச்செய்யப்படும். கடைசியாக போட்ட ஆணைப்படி, தமிழ், ஆங்கிலம், மற்ற மொழி 5 : 3 : 2 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும். வெளி மாநிலத்திருந்து வந்து இங்கு கடை தொடங்குபவர்கள், பன்னாட்டு கடைகள், கண்டிப்பாக தமிழில் போட்டு விடுகின்றனர். தமிழர்கள்தான் தமிழ் தவிர்த்து ஆங்கிலத்தில் ( அல்லது வடமொழியில் ) பெயர் வைத்து கூத்தடிப்பதெல்லாம்.

என்ன செய்ய தாழ்வு மனப்பான்மை...

பொதுவாகவே, பெயர் பலகைகளில், தமிழ் தெரியாதவர்களுக்கு ஆங்கிலப்பெயர்கள் என்பதுபோய், ஆங்கிலம் தெரியாதோர்க்கு தமிழ் எனும் போசமான நிலைக்குத் தமிழகம் சென்றுகொண்டிருக்கிறது
( இணையத்திலிருந்து எழுத்தாளரின் அனுமதியுடன் பெறப்பட்டது )

[3][**15. Name board of the establishments.**—(1) The name board of every establishment shall be in Tamil and wherever other languages are also used, the version in English shall be in the second place followed by the versions in other languages, if any.

(2) The Tamil version shall be written predominantly in the name board by providing more space than for other languages.

(3) The Tamil letters in the name board shall be in the reformed script.

Explanation.—The "reformed script" means the script in the form as given in the Annexure to the G.O. Ms. No. 1875, Education, dated the 19th October 1978 as amended




2019/9/8 11:14


UREA




MIDFIELD

# மாதாந்திர கலந்தாய்வு | ஆகத்து 2019

18 ஆகத்து அன்று நடைபெற்ற கலந்தாய்வில் கடந்த வேலூர் பாராளுமன்ற தேர்தல் குறித்தும், செப்டம்பர் 01-ல் தஞ்சாவூரில் நடைபெற உள்ள அருள்மொழிவர்மனுக்கு (ராச ராச சோழன்) நமது கட்சியின் சார்பில் நடத்தும் நிகழ்வு குறித்தும் மற்றும் இப்பிரிவின் அடுத்த கட்ட திட்டங்கள் & இப்பிரிவிற்கான உறுப்பினர் சேர்க்கை குறித்தும் விவாதிக்கபட்டது.

